செ.வெ.எண்: 26 நாள்: 07.02.2017

# திருநல்லூரில் உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி ஜல்லிக்கட்டு போட்டி நடத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், திருநல்லூரில் நடைபெறவுள்ள ஜல்லிக்கட்டு போட்டிக்கு மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (07.02.2017) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பேசியதாவது:

நமது மாவட்டத்தில் உள்ள திருநல்லூரில் ஜல்லிக்கட்டு போட்டி சிறப்பாக நடைபெறும். அதனடிப்படையில் திருநல்லூரில் சனிக்கிழமை (11.02.2017) அன்று உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி ஜல்லிக்கட்டு போட்டி சிறப்பாக நடைபெறவுள்ளது. இந்த ஜல்லிக்கட்டு போட்டியை எவ்வித அசம்பாவிதங்களுமின்றி நடத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பிறப்பணிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. இதில் மாடுகள் அவிழ்த்து விடும் இடம் (வாடிவாசல்), மாடுபிடி வீரர்கள் நிற்கும் இடம், பார்வையாளர்கள் பார்க்கும் இடம், சிறப்பு விருந்தினர்கள் அமரும் இடம், செய்தியாளர்கள் அமரும் இடம், மாடுகள் பாதுகாப்பாக நிற்கும் இடம், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு வசதிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வில் உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி அனைத்து விதிமுறைகளையும் முறையாக கடைபிடித்து போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய விழா கமிட்டியாளர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட அரசு அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்த ஆய்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர்.ஜெ.லோகநாதன்,இ.கா.ப., கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் மரு.தேவதாஸ், சுகாதாரப்பணிகள் துணை இயக்குநர் மரு.பரணீதரன், மருத்துவப்பணிகள் இணை இயக்குநர் மரு.சம்சத்பேகம் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**